| | | |
|---|---|---|
| **தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்** | | |
| **பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.** | | |
| **தலைமை இடம் - சென்னை.** | | |
| **K.சந்திரசேகரன்**<br>**தலைவர்** | **R.சந்திரசேகரன்.**<br>**பொதுச்செயலாளர்** | **E.சித்தையன்**<br>**நிதிச்செயலாளர்** |

**சுற்றறிக்கை / 09-2018** **29-06-2018**

அன்புடையீர்,

வணக்கம். 22-02-2018 மின்வாரிய நிர்வாகத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமிடையே ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு திருத்த ஒப்பந்தப்படி ஏப்ரல்/ மே திங்களிலேயே புதிய ஊதியமும், நிலுவைத் தொகையும் வழங்கப்பட்டு விட்டது. வேலைப்பளு ஒப்பந்தப்படி 1) மஸ்தூர், கள உதவியாளர் இணைப்பு, 2) கணக்காளர் 2 மற்றும் கணக்காளர் பொறுப்புகள் இணைப்பு, 3) ஒப்பந்தத் தொழிலாளர்கள் தினக்கூலி ரூ. 250 லிருந்து ரூ.380 உயர்வு, 4) பயிற்சிக் காலம் 3 மாதமாகக் குறைப்பு 5) 43 முதுநிலை கணக்கீட்டு அலுவலர், 6) 156 துணைக்கோட்டங்களுக்கு கணக்கீட்டு அலுவலர், 7) பகுதி நேர ஊழியர்களின் ஊதிய உயர்வு, 8) அரசு ஓய்வூதியத்தை மின்வாரியத் தொழிலாளர்களுக்கு அமுலாக்கல், 9) 4வது சனிக்கிழமை விடுமுறை மற்றும் 10) வடசென்னை அனல் மின்நிலையத்திற்கு முதுநிலை நிர்வாக அலுவலர் அனுமதி. ஆகியவைகளுக்கு உத்திரவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

ஒப்பந்தப்படி வழங்கப்பட வேண்டிய 2000 மின்பாதை ஆய்வாளர் பொறுப்புகள், 383 சிறப்புநிலை முகவர் பொறுப்புகள், 115 தொழில் நுட்ப உதவியாளர் பொறுப்புகளுக்கான அனுமதி வழங்க வேண்டியும், அஸசர் 2 மற்றும் அஸசர் பொறுப்பு இணைப்பிற்கு பதவி உயர்வுக்கான ஆண்டுயர்வு வேண்டியும், பணிக்காலத்தில் 3 பதவி உயர்வு கோரிக்கையை பரிசீலிக்க வேண்டியும், மின்வாரியத் தலைவரை, 13-06-2018 அன்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்துடன் சேர்ந்து நேரில் சந்தித்து பேசினோம்.

அதேபோல் வருவாயப் பிரிவு, அட்டைப்பட்டியல் பிரிவு, களப்பிரிவு மற்றும் பண்டகப் பிரிவுகளுக்கு ஒப்பந்தப்படி வழங்கப்படவேண்டிய, பொறுப்புகளுக்கு வட்டங்களிலிருந்து மின் இணைப்புகள், மின்மாற்றிகள், அனல் மின் நிலையங்கள், பிரிவு அலுவலகங்கள் முதலிய விவரங்களை விரைவில் கேட்டுப் பெற்று புதிய கூடுதல் பதவிகள் அனுமதிக்க வேண்டும் என்றும் மின்வாரியத் தலைவரைக் கேட்டுக் கொண்டோம்.

02-06-2018 சுற்றறிக்கையில் நாம் தெரிவித்திருந்தபடி 01-01-2003 தேர்வு நிலை வருவாய் மேலாளர் சம்பளம் ரூ.8,100 - 275 - 15525 பொருத்தும் வழக்கு 04-06-2018 அன்று பட்டியலிடப்படவில்லை. அடுத்த விசாரணை தேதி தெரிந்தவுடன் சுற்றறிக்கை அனுப்புகிறோம்.

06-06-2018 அன்று சென்னை வந்திருந்த கோவை வட்டச் செயலாளர், மற்றும் பொறுப்பாளர்கள் ஊதிய உயர்வு நன்கொடை ரூ. 1 லட்சம் தலைவர், பொதுச்செயலாளர் மற்றும் நிதிச்செயலாளரிடம் வழங்கினார்கள்.

நமது சங்கத்தின் 182வது மாநிலச் செயற்குழு கூட்டம், 23-06-2018 அன்று சென்னையில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் பல்வேறு வட்டங்கள் சார்பாக ஊதிய உயர்வு நன்கொடை மற்றும் சந்தா தொகை ரூ. 2,24,350/- வழங்கப்பட்டது.

ஊதிய உயர்வு நன்கொடை: ஈரோடு வட்டம் ரூ. 10,000, புதுக்கோட்டை வட்டம் ரூ. 10,000, கோவை வடக்கு வட்டம் ரூ. 20,000, கோவை தெற்கு வட்டம் ரூ. 5,000, சென்னை வடக்கு மண்டலம் ரூ. 1,01,000. இவற்றில் ஒருமாத பலனை வழங்கியவர்கள்: திரு. S. நாகராஜன் வட்டச் செயலாளர் கோவை வடக்கு ரூ. 10,000, திரு. M. சூசை ராஜ் மண்டலச் செயலாளர் சென்னை வடக்கு ரூ. 18,000, திரு. M. மாறன் வட்டச் செயலாளர் சென்னை மையம் ரூ. 18,000, திரு. S. நரசிம்மலு மதிப்பீட்டு அலுவலர் சென்னை வடக்கு ரூ. 18,000, திருமதி. C. லட்சுமி வருவாய் மேலாளர் ரூ. 18,000, திருமதி. S. கீதா சென்னை மைய வட்ட மகளிரணிச் செயலாளர் ரூ. 10,000, திரு. K.R. முருகப்பன் வருவாய் மேலாளர் ஓய்வு ரூ. 4,000 சங்க வளர்ச்சியை மனதில் கொண்டு ஊதிய உயர்வில் ஒருமாத பலனை சங்கத்திற்கு நன்கொடையாக வழங்கியவர்களை பாராட்டுகிறோம்.

இதுவரை சங்கத்தின் ஊதிய உயர்வு நன்கொடை வசூல் **ரூ. 11,26,545** ஆகும்.

செயற்குழு கூட்டத்தில்

1. 22-02-2018 அன்று ஏற்பட்ட ஊதிய உயர்வு மற்றும் வேலைப்பளு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல்.
2. ஒப்பந்தப்படி நிறை வேற்றப்பட வேண்டிய கோரிக்கைகள் மீது விரைவில் உத்திரவு வழங்கிட வாரியத்தை வற்புறுத்தல்.
3. வேலைப்பளு ஒப்பந்தத்திற்குட்படாத மத்திய அலுவலகங்களில் பணிப்பகிர்வு மற்றும் பணியாளர் எண்ணிக்கை வரையறுத்தல்.
4. புதிய அலுவலகங்களில் பகுதி நேரப் பணியாளர் நியமனம்.
5. பகுதி நேரப் பணியாளர்களுக்கு தமிழக அரசின் சத்துணவு ஊழியர்களுக்கு இணையாக சலுகை வழங்குதல்.
6. I.L. உத்திரவு பெற்றுள்ள ஒப்பந்தத் தொழிலாளர் நிரந்தரம்.
7. 01-04-2003க்குமுன் ஒப்பந்தத் தொழிலாளர்களாக சேர்ந்தவர்களுக்குப் பழைய ஓய்வூதிய திட்டத்தினை அமுலாக்கல்.
8. அனைத்துப் பிரிவு தொழிலாளர்களுக்கும் முதன்மைப்பட்டியல் வழங்குதல்.
9. பதவி உயர்வுக்கு குறும தேதியை முறையாக பின்பற்றல்.
10. வட்டங்களில் சங்க அலுவலகம் வழங்குதல்.
11. இளநிலை பொறியாளர் 2ம் நிலை ஊதிய ஏற்றத்தாழ்வினை சரிசெய்தல்.
12. பணியாளர்கள் Diversion செய்யப்படுவதை தவிர்த்தல்.
13. அட்டைப்பட்டியல் பணியாளர்களுக்கு புதிய கணினி H.H.D மற்றும் உபகரணங்கள் வழங்குதல்.
14. வேலைப்பளு ஒப்பந்தப்படி புதிய பொறுப்புகள் வழங்குதல்.
15. சங்க நிதியினை முதலீடு செய்தல்.
16. சங்கத்தின் சொத்துக்களைப் பாதுகாத்திட, பராமரித்திட, குழு ஏற்படுத்துதல்.

முதலிய பொருள்கள் மீது விவாதம் நடைபெற்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சமீபத்தில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் சட்டமன்றத்தில் அறிவித்தவாறு உதவிப் பொறியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் (கணக்கு) பதவிகளுக்கு நேரடிப் பணிநியமனம் செய்வதற்கான பணிகள் துவங்கிவிட்டன. அதற்குமுன்னதாக இளநிலை உதவியாளர் (நிர்வாகம் மற்றும் கணக்கு) பொறுப்புகளுக்கு உள்முகத் தேர்வு செய்து முடிக்க வேண்டும் என்று நிர்வாகத்தை வற்புறுத்தியுள்ளோம். நமது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நமது சங்க கோரிக்கையினை ஏற்று வருவாய்ப்பிரிவு மற்றும் அட்டைப் பட்டியல் பணியாளர்களை, வேறுபகுதிக்கு டைவர்சன் (Diversion) செய்யக்கூடாதென நிர்வாகம் அனைத்து மேற்பார்வை பொறியாளர்களுக்கும் 26-06-2018 உத்தரவில் அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கனவே திட்டமிட்டபடி நமது சங்கத்தின் 63வது மாநிலப் பொதுக்குழு 15-07-2018 அன்று TVM மஹால் SN சாவடி ரோடு, திருப்பாப்புலியூர், (தினத்தந்தி கட்டிடம் அருகில்) கடலூரில் நடைபெற உள்ளது. பொதுக்குழுவிற்கான அழைப்பிதழ் தனியே அனுப்பி வைக்கப்படுகிறது. பொதுக்குழுவில் தேர்தல் நடைபெறும் எனில் வாக்களிக்க தேவைப்படும் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை (ஆதார் கார்டு, பான் கார்டு, ரேசன் கார்டு, டிரைவிங் லைசன்ஸ், மின்வாரிய ID) ஏதேனும் ஒன்றினை கைவசம் வைத்திருக்க வேண்டுகிறோம்.

அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்

பெறுநர் : கிளைச்செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மத்திய சங்க பொறுப்பாளர்கள்.

நகல் : செய்திமடல்.